சிலைகளையும் ஒன்றாகச் சேர்த்துவைத்துப் பாதுகாப்பதென அரசு ஏற்கெனவே அறிவித்திருந்ததே, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட சிலைகள் கிடைக்கக் கிடைக்க, அப்படிக் காப்பாற்றப்பட வேண்டிய தொன்மையான சிலைகளை ஒரு கோயிலில் மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளிலே வைத்துப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அமெரிக்காவிலுள்ள நார்ட்டன் ஸைமன் அவர்கள் அந்தச் சிலையைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமானால், பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி ஏதாவது தகவல் நமது அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால், அதன் விவரங்கள் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுபற்றிய தகவல் எதுவும் இப்பொழுது அரசுக்கு வரவில்லை. ஆனால், அமெரிக்கத் தூதருடன் மத்திய அரசு இதுபற்றித் தொடர்பு கொண்டிருக்கிறது.

## *I.A.S. Officers selected from Tamil Nadu*

*151 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state the total number of candidates from this State who have been selected for the Indian Administrative Service during the calendar year 1972 from the open market and promotion quota ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (1) 1972-ல் ஐ.ஏ.எஸ். பதவிக்குத் தமிழ்நாட்டிலிருந்து பதினொரு பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுள் தமிழ்நாட்டுக்கு ஆறு அதிகாரிகள் ஒதுக்கப்பட்டனர்.

(2) 1972-ல் பதவி உயர்வுப் பங்களவு மூலமாக ஐ.ஏ.எஸ். பதவிக்கு இம் மாநில அரசு அதிகாரிகள் பணியிலிருந்து பதினான்கு அதிகாரிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, ரெவின்யூ துறையில் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் மற்றத் துறைகளில் உள்ளவர்களுக்கும் ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு கொடுக்க அரசு சிபாரிசு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். இவ்வாறு பதவி உயர்வு கொடுக்கும்போது ஸ்ட்ரிக்ட் ஸீனியாரிடி முறை கையாளப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதிலும் 'கோட்டா'க்கள் வழங்கப்படுகின்றன.